பக்கங்கள் 14+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 24 சனிக்கிழமை 06.04.2024 அதிர்வு 250

## நிந்தவூர் விபத்தில் முதியவர் மரணம்!

(கனகராசா சரவணன்)

அக்கரைப்பற்று, நிந்தவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாட்டுபாளையம் பகுதியில் பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 04▶



# ஜனாதிபதி வேட்பாளராக நாமல் களமிறங்கினால் மொட்டுக் கட்சி உடையும்



## அடித்துக் கூறுகின்றார் பிரசன்ன

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷவைக் களமிறக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இரண்டாகப் பிளவுபடும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:- 04▶

# ஒரே வீட்டில் தூக்கில் தொங்கியவாறு ஆணும் பெண்ணும் சடலங்களாக மீட்பு 04▶

## கொலையா? தற்கொலையா? எனப் பொலிஸார் தீவிர விசாரணை

(ஆ.ரமேஸ்)

உடப்புஸ்ஸலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்ல – பாஹலகம பகுதியில் வீடு ஒன்றில் இருந்து ஆண் ஒருவரினதும், பெண் ஒருவரினதும் சடலங்கள் இன்று காலை மீட்கப்பட்டுள்ளன என்று உடப்புஸ்ஸலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

39 மற்றும் 42 வயதுடைய இருவர் ஒரே வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மூன்று பிள்ளைகளின் தாயான டபிள்யூ.எம்.பிரியங்கனி (வயது 42) மற்றும் திருமணமாகாத ஆண் பி.எம்.அனுர பண்டார (வயது 39) ஆகிய இருவரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் உடப்புஸ்ஸலாவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ள மூன்று பிள்ளைகளின் தாயான பிரியங்கனிக்கும், 04▶







# யாழ். மறைமாவட்டத்தை வந்தடைந்தது மன்னார் மடு மாதாவின் திருச்சொரூபம்

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

மன்னார் மடு மாதா திருச்சொரூபம் இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு ஊர்திப் பவனியாக எடுத்து வரப்பட்டது. இதன்போது ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மடு மாதாவின் முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு மாதா திருச்சொரூபம் வடக்கிலுள்ள மறைமாவட்ட பங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

இந்நிலையில், இன்று காலை மன்னார் மறைமாவட்டத்திலிருந்து யாழ். மறைமாவட்டத்துக்கு மடு மாதா திருச்சொரூபம் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் இன்று முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தில் மடு மாதா திருச்சொரூபம் வைக்கப்பட்டு யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் விசேட திருப்பலி இடம் பெற்றது.

தீவகம், இளவாலை, பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக் கோட்டங்களின் பங்குகளுக்கும் எதிர் வரும் 30ஆம் திகதி வரையில் மடு மாதா திருச்சொரூபம் எடுத்து வரப் படவுள்ளது.















# யாழில் மோட்டார் சைக்கிள் மோதி முதியவர் ஒருவர் பரிதாப மரணம்!

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்வியங்காடு பகுதியில் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவரைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக செம்மணிப் பகுதியில் ஊடாகத் திரும்பிச் செல்ல முற்பட்ட முதியவர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

உயிரிழந்தவர் 61 வயதுடைய க.மோகனதாஸ் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைக் கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# ரயில் - கப் மோதி விபத்து

## ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

**(கே.வசந்தன்)**

வவுனியா – ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இன்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, கடவையைக் கடக்க முற்பட்ட கப் வாகனத்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது

விபத்தில் கப் வாகனம் கடுமையான சேதமடைந்ததுடன் அதன் சாரதி படுகாயமைடந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விபத்தில் ரயிலின் முன்பகுதியும் சேதமடைந்துள்ளது. இதையடுத்து பயணிகள் இறக்கப்பட்டு மற்றொரு ரயிலில் ஏற்றப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இதேவேளை, குறித்த பாதுகாப்பற்ற ரயில் கடவையில் சில வருடங்களுக்கு முன்பு இடம்பெற்ற விபத்தில் 4 பேர் சாவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.










# ஒலிபெருக்கி சாதனத்தினுள் மறைத்து கஞ்சா கடத்திச் சென்ற மூவர் சிக்கினர்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சிறிய ரக ஒலி பெருக்கி சாதனத்தினுள் கஞ்சாவை மறைத்துக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 18 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சாவகச்சேரி பகுதியில் கடந்த 30 ஆம்திகதி 4 கிலோ கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இருவரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தி 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி கோரியிருந்தனர். அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களிடமிருந்து இரகசியத் தகவல்களைப் பெற்று, பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

அந்தவகையில், இன்று மோட்டார் சைக்கிள் ஒன்றில் கஞ்சா கடத்திச் செல்லப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் செம்மணி பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தபோது சந்தேகத்துக்கிடமான முறையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களைப் பொலிஸார் மறித்து சோதனையிட்டனர்.

அதன்போது , சிறிய ரக ஒலிபெருக்கி சாதனம் ஒன்றினுள் கஞ்சா போதைப் பொருளை மறைத்து எடுத்துச் செல்வது பொலிஸாரால் கண்டறியப்பட்டது. அதனைச் சோதனையிட்டபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை மீட்டனர்.

அதேவேளை, அவர்களின் உடமையில் இருந்தும் ஒரு தொகை கஞ்சாவை மீட்டனர்.

அதையடுத்து மூவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் மூவரும் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்ற விடயம் தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நிந்தவூர்...

இன்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற முதியவர் சாவடைந்துள்ளார்.

நிந்தவூர், 5ஆம் பிரிவைச் சேர்ந்த 72 வயதுடைய அகமட் லெப்பை மீரா லெப்பை என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பஸ்ஸின் சாரதியை நிந்தவூர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நிந்தவூர் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஜனாதிபதி...

“தற்போதுள்ள ஜனாதிபதி வேட்பாளர்களில் சவாலை ஏற்கக் கூடிய, வெற்றி பெறக் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான். நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் இருக்கின்றது என அவரின் தந்தையே கூறி விட்டார். அரசியலில் அனுபவம் பெற்ற தலைவரான மஹிந்தவின் அந்தக் கருத்தை அனைவரும் ஏற்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாமல் ராஜபக்ஷ இன்னும் எதுவும் கூறவில்லை. களமிறங்கும் முடிவை நாமல் எடுத்தால் கட்சி இரண்டாகப் பிளவுபடும். தேசிய அமைப்பாளர் என்ற வகையில் அவ்வாறானதொரு முடிவை நாமல் எடுக்கமாட்டார் என்றே நம்புகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவாரா என்பது தெரியாது. ஆனால், போட்டியிட்டால் அவர்தான் பொருத்தமான வேட்பாளர்.” – என்றார்.

### ஒரே வீட்டில்...

இவருடன் உயிரிழந்த திருமணமாகாத ஆண் அனுர பண்டார ஆகிய இருவருக்கும் தகாத உறவு இருந்து வந்துள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதேநேரத்தில் இருவருக்கும் இடையில் இருந்து வந்த தகாத உறவு பெண்ணின் கணவருக்குத் தெரிய வந்ததையடுத்து நேற்றுமுன்தினம் மாலை தாக்குதல் சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து மேற்படி பெண் தனது வீட்டை விட்டு தகாத உறவைப் பேணி வந்த நபருடன் சென்றுள்ள நிலையில் இருவரும் வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இன்று காலை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வலப்பனை நீதிவான் வருகை தந்து சடலங்களைப் பார்வையிட்டு மரண விசாரணை நடத்தினார்.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டார்களா அல்லது கொலை செய்யப்பட்டார்களா போன்ற கோணங்களில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(ஏ.எச். ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோரின் இணைத் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.



திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியின் வரவேற்புரையை தொடர்ந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஆரம்பமானது.





கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கண்டல் தாவரங்களை பாதுகாக்கும் செயற்திட்டம், சட்டவிரோதமாக காணி பிடிப்பவர்களிடமிருந்து அரச காணிகளை பாதுகாப்பதற்கான செயற்திட்டத்தை உருவாக்குதல், மூதூர் பிரதேச செயலக பிரிவின் நல்லூர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஆதிவாசி மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், மான்கள் வீதி விபத்தில் சிக்குவதனை தடுப்பதற்காக திருகோணமலை சங்கமித்தா யாத்திரீகர் மண்டப வீதியில் வேகத் தடைகளை அமைத்தல், கிண்ணியா பிரதேச செயலக பிரிவிலுள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரிய காணிகளில் நீண்டகாலமாக வசிக்கும் மக்களுக்கு விரைவாக காணி உறுதிகளை வழங்குதல், சுற்றுலா தொழிற்துறையை மேம்படுத்துவதற்காக கிண்ணியா பிரதேசத்தில் உப்பாறு கடற்கரையை அழகுபடுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மேலும், கந்தளாய் மீஹஸ்வெவ வாய்க்கால் அமைப்பதற்காக வன பாதுகாவல் திணைக்களத்தின் விதந்துரையைப் பெறுதல், இலுப்பைக் குளத்தில் திருகோணமலை பொது மருத்துவமனை நிர்மாணம் வேலைகளின் முன்னேற்றத்தை ஆராய்தல், திருகோணமலை உயர் பெண்கள் கல்லூரியின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள நுழைவு பாதையை சீராக்குதல், கிண்ணியா பிரதேச சபை பிரதேசத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அலுவலகத்தை மீள நிறுவுதல், கிண்ணியா தள வைத்தியசாலையைப் புதிதாக ஒதுக்கப்பட்ட காணிக்கு கொண்டு செல்லுதல் போன்ற பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இதன்போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, கிழக்கு மாகாண முன்னாள் மாகாண அமைச்சர் ஆரியவதி கலப்பத்தி, கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மேலதிக அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் அரச உயரதிகாரிகள் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மன்னார், மாந்தை மேற்கு பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்த ஆண்டிற்கான இரண்டாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் அரவிந்தனின் நெறிப்படுத்துதலில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேற்படி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலக ரீதியில் மக்கள் எதிர்நோக்கு பல்வேறு விடயங்கள் உட்பட கல்வி, சுகாதாரம், காணி போன்ற விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இந்தப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்

திணைக்கள தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தீர்வுக்கு வழி

இலங்கையில் முக்கால் நூற்றாண்டு காலமாக தீர்க்கப்படாமல், நாட்டையே உலுப்பி வரும் தேசிய இனப் பிரச்சினைக்குக் காரணம் எது என்று கேட்டால் இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வின்மை என்று எல்லோரும் கூறி விடுவர்.

தேசிய இனப் பிரச்சினையை ஒவ்வொரு இனத்தவரும் தமக்குத் தெரிந்த புரிதலில் - தத்தமது கண்ணாடிகள் ஊடாக - பார்க்கின்றார்களே தவிர, பாதிக்கப்பட்ட தரப்புக்களின் பக்கத்திலிருந்து பார்ப்பதில்லை.

இதுதான், இந்த நாட்டில் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நீடிப்பதற்குக் காரணம்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் கூறிச் சென்ற கருத்தும் கூட, அவருக்கும் இந்த புரிந்துணர்வு இல்லவே இல்லை என்பதை வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தி நிற்கின்றது.

அவருக்கு மட்டுமல்ல, இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களின் பெரும்பாலான தலைவர்களுக்கு இந்த விடயத்தில் அடிப்படைப் புரிதலே கிடையாது என்பதுதான் விசனத்துக்குரிய உண்மை.

யாழ்ப்பாணத்தில் அநுரகுமார திஸநாயக்க உபதேசித்த தத்துவம் ஒன்றும் புதியதல்ல. கடந்த நான்கு, ஐந்து தசாப்தங்களாக - முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவிலிருந்து இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரை உபதேசித்து வரும் தத்துவம்தான்.

இலங்கைத் தீவின் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினையை அவர்களின் பக்கத்திலிருந்து பார்ப்பதற்கு பேரினத் தலைவர்கள் - பெரும்தேசிய வாதத்தின் பிரமுகர்கள் - முன்வராத வரை நின்று, நிலைத்து, நீடிக்கும் இந்த பிரச்சினைக்கு ஒரு நிலையான - நிரந்தர - தீர்வு காண்பது பகல் கனவே.

“இந்த நாட்டில் எல்லா மக்களுக்கும் அனைத்து உரிமைகளும் சமமாக உண்டு, நாட்டில் இரு மொழிகளுக்கும் சம உரிமை உண்டு, சம அந்தஸ்து உண்டு, பொது நிறுவனங்கள் மற்றும் முப்படைகளில் எல்லா இனத்தவர்களுக்கும் சம உரிமை அடிப்படையில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.” - என்ற தத்துவத்தைத் தான் அநுரகுமார திஸநாயக்க உட்பட அனைத்து சிங்கள தலைவர்களும் நான்கு, ஐந்து தசாப்தங்களாக கூறிக் கொண்டிருக்கின்றார்கள்.

அப்படித் தாம் கூறுவதைக் கூட அவர்கள் செயலில் செய்கின்றார்கள் இல்லை. அதற்குத் தலைகீழாகத்தான் நடக்கின்றார்கள். திட்டமிட்டுச் செயல்படுகின்றார்கள். அதற்காகத் தமது பேரினவாத எதேச்சாதிகாரத்தை பிரயோகின்றார்கள் என்பதுதான் நடைமுறையில் உள்ள பிரச்சினை.

விவகாரமும் தீர்வும் இதற்கு அப்பாற்பட்டவை. நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்பட இந்த உபதேசங்களுக்கு அப்பால் செல்ல வேண்டும் என்பதுதான் கட்டாய நிலைமை.

அதற்கு தென்னிலங்கைப் பெரும் தேசியவாதத்தின் தலைவர்களும் பிதாமகர்களும் தயார் இல்லை. அதுதான் பிரச்சினை.

பேரின மக்களின் மொழியான சிங்களத்துக்கும், மதமான பௌத்தத்துக்கும் கிடைக்கின்ற - தரப்படுகின்ற - சம உரிமையும், சம அந்தஸ்தும் மற்றைய மொழியினருக்கும், மதத்தினருக்கும், இனத்தினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்று வாயால் பேசுவதன் மூலமோ, யதார்த்தத்தில் அந்த நிலைப்பாட்டை நிலைநிறுத்த உண்மை, நேர்மையுடன் நடவடிக்கை எடுப்பதன் மூலமோ மட்டுமே தீர்வு வந்துவிடாது. அதையும் தாண்டி ஒரு முக்கிய விடயம் - தீர்க்கப்படாத பிரச்சினை - சிறுபான்மை இனங்களுக்கு, மொழிகளுக்கு, மக்களுக்கு இருக்கின்றது. அதைப் புரிந்து கொண்டால் மட்டுமே தீர்வுக்கான - தீர்வு காண - மார்க்கம் கிட்டும்.

அது - காலம் காலமாகத் தாம் வாழும் தமது தாயக பூமியில், தங்கள் இனத்தின், மதத்தின், மொழியின் தனித்துவச் சிறப்பையும் பரம்பலையும் அழியாமல் பேணி, அதே மாண்புடன் வாழ்வதற்கான கட்டமைப்பு ரீதியான விசேட ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்த எதிர்பார்ப்பை நிறைவு செய்தால்தான் நின்று, நிலைத்து, நீடிக்கும் தீர்வும் சமாதானமும் அமைதியும் சாத்தியமாகும்.

பெரும்பான்மையினரின் இனத்துக்கு, மொழிக்கு, மதத்துக்குள்ள சம உரிமைகளையும் அந்தஸ்தையும் கௌரவத்தையும் தருகிறோம் என்ற பேரினத் தலைவர்களின் காலாதி கால வாய்ச்சவடால் பேச்சு மட்டும் தீர்வையோ, இணக்கத்தையோ, இன சௌஜன்யத்தையோ தந்து விடாது.



# பரிசளிப்பு வைபமும் இப்தார் நிகழ்வும்

(எம்.ஏ.றமீஸ்)

புனித ரமழான் காலத்தில் மக்களின் ஆன்மீக செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை அல் – இபாதா கலாசார மன்றத்தின் இப்தார் நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் மௌலவி எம்.ஐ.சப்றி தலைமையில் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாவெப்பையின் வழிப்படுத்தலின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வின்போது புனித ரமழான் காலத்தில் கடந்த இருபது தினங்களுக்கு மேலாக தொடரும் விஷேட மார்க்க சொற்பொழிவுகளை மையப்படுத்தி இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இருந்து அண்மைக்காலத்தில் பொதுப் பரீட்சைகளில் திறமை காட்டியவர்கள் மற்றும் புதிதாக உயர் பதவிகளில் இணைக்கப்பட்டவர்கள் போன்றோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கிழக்கிலங்கை அரபுக் கலாசாலை முதல்வர் மௌலவி ஏ.எல். எம்.அஷ்ரஃப் ஷர்க்கியின் விஷேட மார்க்க சொற்பொழிவும், துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இதில் உலமாக்கள், அரசியற் பிரமுகர்கள், அரச உயர் அதிகாரிகள், துறைசார் முக்கியஸ்தர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.















# கல்முனையில் இப்தார் நிகழ்வு

(எம். எப். றிபாஸ்)

கல்முனை மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்படும் இப்தார் நிகழ்வு சாய்ந்த மருது

லீமெரீடியன் மண்டபத்தில் நடை பெற்றது.

மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும், முன்னாள் மாநகர சபை முதல்வருமான சிராஸ் மீராசாஹீப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும், கல்முனை மாநகர சபையின் ஆணை யாளர் அஸ்மி கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல பிர தேசங்களிலிருந்து அரசியல் பிர முகர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், கல்லூரியின் மாணவர்கள், பழைய மாணவர்கள் விரிவுரையாளர்கள், ஊழியர்கள், சமூக சேவை அமைப்பு களின் பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசி ரியர்கள் என பலரும் கலந்து கொண்ட னர்.













# மாவடிமுன்மாரியில் மருத்துவ முகாம்



**(பழுவூரான்)**

"நாடு தழுவிய ரீதியில் நோயாளர்கள் பராமரிப்பு" எனும் தொனிப்பொருளில் பொது மக்களின் நன்மை கருதி

மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் நடாத்திய இலவச மருத்துவ முகாம் நேற்று மாவடிமுன்மாரி கிராம சேவகர் பிரிவில் நடைபெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மகிழடிதீவு வைத்தியசாலையின் வைத்தியர் மற்றும் வைத்திய குழுவினரும் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு ஆயுள்வேத மருத்துவமனையின் வைத்தியர்களும் வைத்திய குழுவினரும் தங்கள் சேவையினை வழங்கியிருந்தனர்

இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர், முகாமைத்துவ பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்கள், அதிகளவான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

















# ஊட்டச்சத்து குறைபாடு தொடர்பான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை நிகழ்வு



(சர்ஜுன் லாபீர்)

ஊட்டச்சத்து குறைபாடுக்கான நிபுணத்துவ சார் செயற்றிட்டத்தை உருவாக்குதற்கான திறன் மேம்பாட்டு திட்டம் தயாரிப்பது தொடர்பான ஒரு நாள் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிக்காட்டலுக்கமைய சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இந்த பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

இந்த பயிற்சிப் பட்டறையின் பிரதான வளவாளர்களாக பொருளியல் துறை கலாநிதியும், சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளருமான ஏ.எல்.எம் அஸ்லம் கலந்து கொண்டார்.

மேலும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.எல்.ஐ கபீர், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் வலுவூட்டல், சமூக நலத் திட்டங்கள் மற்றும் மனித உரிமைகளுக்கான சமாதான தூதுவர்கள் அமைப்பின் பணிப்பாளர் ஏ.எஸ்.எம் அறூஸ், விவசாய போதனாசிரியர் எம். நளீர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம் நவாஸ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த பயிற்சிப் பட்டறையில் ஐந்தாண்டு செயற்திட்டம் தயாரிப்பது மற்றும் ஏனைய பல விடயங்கள் பற்றி தெளிவு படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# செவிப்புலன் வலுவற்றோருக்கு உணவுப் பொருள்கள் வழங்கி வைப்பு








(பழுவூரான்)

காத்தான்குடி இஸ்லாமிய செவிப்புலன் வலுவற்றோர் ஒன்றியத்தினால் நோன்பு காலத்தில் அதன் உறுப்பினர்களுக்கு சக்தாத் உலருணவு பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

ஒன்றியத் தலைவர் எம்.எம். ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், காத்தான்குடி உதவி சமூகசேவை உத்தியோகத்தர் திருமதி எம்.நஜ்மியா, காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் ஜே.யூ.எம்.முஸம்மில், காத்தான்குடி அல் அக்ஸா பிரதம பேஷ் இமாம் அல்ஹாஜ் ஏ.எல்.ஆதம் லெவ்வை, காத்தான்குடி அல்- ஹிறா மகாவித்தியாலய ஜமாலி அல்ஹாஜ் மௌலவி ஏ.சி.எச்.எம்.பௌசுல் அமீன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இதன்போது காத்தான்குடி இஸ்லாமிய வலுவற்றோர் ஒன்றியத்தின் 55 உறுப்பினர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரியரும், இஸ்லாமிய செவிப்புலன் வலுவற்றோர் சங்கச் செயலாளருமான ஏ.எல்.எம்.மபாஸ், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பிரதிப் பதிவாளர் நாயகமாக பரஞ்ஜோதி பிரபாகர் பதவியேற்பு





**(பழுவூரான்)**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கிழக்கு வலய பிரதிப் பதிவாளர் நாயகமாக பரஞ்ஜோதி பிரபாகர் தமது கடமையினை பொறுப்பேற்றுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இயங்கிவரும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் கிழக்கு வலய அலுவலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ள இவர் வடக்கு வலையத்தின் ஈ – திட்டத்தின் பிரதிப் பதிவாளர் நாயகமாக கடந்த மூன்று வருடங்களாக சேவையாற்றி வந்தார்.

இந்த நிலையில் கிழக்கு வலய பிரதி பதிவாளர் நாயகமாக தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த 1992 ஆம் ஆண்டு அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்டு 2005 ஆம் ஆண்டிலிருந்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் யாழ்ப்பாண காணிப் பதிவாளர் ஆகவும், அதன் பின்னர் வடக்கு வலய உதவிப் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்திருந்தார்.

இந்த நிலையில், கிழக்கு வலயத்தில் கடமையாற்றி வந்த பிரதிப் பதிவாளர் நாயகம் ஓய்வு பெற்றதன் பின்னர் நிலவிய வெற்றிடத்திற்கு பதிவாளர் நாயகமா நாயகம் திணைக்களத்தினால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



# தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ரவூப் ஹக்கீம் எம்.பி. திடீர் விஜயம்





**(நூருல் ஹுதா உமர்)**

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் நிந்தவூரில் உள்ள மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள தேவைப்பாடுகள் குறித்து நேரில் அறிந்து கொண்டார்.

மாவட்ட அலுவகமும் மாவட்ட தொழிற்பயிற்சி நிலையமும் அமைந்துள்ள இந்த வளாகத்தில் காணப்படுகின்ற பௌதீக வளப்பற்றாக்குறைகள், மாணவர்களின் தேவைகள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், கற்கைநெறிகள் நடைபெறும் வகுப்பறைகளுக்கு விஜயம் செய்த அவர், மாணவர்களின் தேவைப்பாடுகள், மேற்கொள்ளப்பட வேண்டிய பௌதீக அபிவிருத்திகள் தொடர்பாகவும் ஆராய்ந்தார்.

இதன்போது தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் ஏ.ஏ. ஜாபிர் உள்ளிட்ட அதிகாரிகளும் உடனிருந்தனர்.

இந்த பயிற்சி நிலையத்தின் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்யவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# சித்தி விநாயகர் விளையாட்டு கழக உதை பந்தாட்ட சுற்று போட்டி





மட்டக்களப்பு , மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நடராஜானந்தபுரம் சித்தி விநாயகர் விளையாட்டு கழகத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவும், உயிரிழந்த உறவுகளின் ஞாபகார்த்தமாகவும் நடைபெற்ற மாபெரும் உதை பந்தாட்ட சுற்று போட்டியின் இறுதி நாள் நிகழ்வு அக் கழகத்தின் தலைவர் பா.யோகேஸ்வரன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சித்திவிநாயகர் விளையாட்டு கழக மைதானத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 37 கழகங்கள் பங்கு பற்றிய உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி இறுதி நாள் நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

இதன் போது கரவெட்டி ஆதவன் விளையாட்டு கழகம் மற்றும் காஞ்சிரங்குடா நாக ஒளி விளையாட்டு கழகங்கள் இறுதிப் போட்டியில் மோதி இருந்த நிலையில் 01 ஆம் இடத்தினை கரவெட்டி ஆதவன் விளையாட்டு கழகமும் 02 ஆம் இடத்தினை காஞ்சிரங்குடா நாக ஒளி விளையாட்டு கழகமும் பெற்றிருந்தன.

03 ஆம் இடத்தினை முகத்துவாரம் லைட்கவுஸ் அணியினரும் 4ஆம் இடத்தினை பட்டிப்பளை வைரவர் விளையாட்டு கழகத்தினரும் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் படுவான்கரை உதை பந்தாட்ட சம்மேள தலைவர் சி. தசேந்தன், நடராஜாந்தபுரம் சித்தி விநாயகர் ஆலய பரிபால சபை உப தலைவர் யோகேஷ்வரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மண்முனை மேற்கு பிரதேச குழு செயலாளர் நித்தீஸ்வரன், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் மகேஸ்வரன் கட்சியின் நடராஜாந்தபுரம் கிராமிய குழு தலைவர் பிரகாஷ் உட்பட கிராம மட்ட அமைப்புக்களின் நிர்வாகிகள் விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடி கோட்டத்திலுள்ள அதிபர்களுடன் கலந்துரையாடல்





(எம்.எம்.றம்ஸீன்)

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலகத்தின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள எம்.எம். ஜவாட் நழீமி மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலய மண்டபத்தில் காத்தான்குடி கல்வி கோட்டத்திலுள்ள 33 பாடசாலைகளின் அதிபர்களை சந்தித்தது டன், பாடசாலைகளின் தேவைகள் மற்றும் கல்வி நடவடிக்கைகள் பாடசாலையின் செயற்பாடுகள் உட்பட பல்வேறு விடயங்களையும் அதிபர்களிடத்தில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது பாடசாலைகளின் நிலவரங்களை ஆய்வுப் படிவம் மூலம் பெற்றுக் கொள்ளவும் ஆலோசனைகளையும் அறிவுறுத்தர்களையும் புதிய வலயக் கல்வி பணிப்பாளர் ஜவாட் நழீமி அதிபர்களுக்கு வழங்கினார்.

இந்த சந்திப்பில், காத்தான்குடி கோட்டக் கல்வி அதிகாரி ஏ.ஜே. எம்.ஹக்கீம் உட்பட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் கல்வி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# வாக்குப்பதிவு வீதத்தை அதிகரிக்க டில்லியில் ஆலோசனைக் கூட்டம்

## இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு

மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வாக்கு சதவீதத்தை அதிகரிக்க இந்திய தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக டில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் தலைமையில் நேற்று ஆலோசனை கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் தேர்தல் ஆணையர்கள் ஞானேஷ் குமார் மற்றும் சுக்பீர் சிங் சாந்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதுகுறித்து தலைமை தேர்தல் ஆணையர் கூறுகையில்,

"எதிர் வரும் மக்களவைத் தேர்தலில் வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த கூட்டம் நடைபெற்றது. நாடு முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து, குறிப்பாக, குறைந்த வாக்குப்பதிவு சதவீத




வரலாற்றைக் கொண்ட நகராட்சி ஆணையர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்று தங்களது கருத்துகளை தெரிவித்தனர்.

தேர்தலில் வாக்கு செலுத்துவது குறித்து விழிப்புணர்வு இல்லாத நகர்ப்புற மற்றும் கிராமப்புற நாடாளுமன்ற தொகுதிகளில் வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவதன் அவசியத்தையும், அதன் வலிமை என்ன என்பதையும் புரியவைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

266 நகர்ப்புற மற்றும் கிராமப்புற நாடாளுமன்ற தொகுதிகளில் வாக்களிப்பு அமலாக்கத்துக்கான சிறப்பு திட்டம் இந்த ஆலோசனை கூட்டத்தில் தயார் செய்யப்பட்டது."– என்றார்.

அதேபோன்று, வாக்குச்சாவடி மையங்களில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் உள்ளிட்ட வசதிகளை வழங்குதல், வாக்கு சதவீத இலக்கை எட்டுதல், குடியுரிமை நல சங்கங்கள், செல்வாக்கு மிக்க நபர்களின் தேர்தல் ஈடுபாடு ஆகியவற்றை உறுதி செய்வது அவசியம் என்பதை தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் ஆணைய கூட்டத்தில் வாக்காளர் அக்கறையின்மை குறித்த சிறு புத்தகம் வெளியிடப்பட்டது. அதில், நகர்ப்புற மக்கள் தேர்தலில் அக்கறை காட்டாமல் இருப்பது பெரும் கவலையை அளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் மோடி தமிழகத்திலேயே தங்கினாலும் ஒரு தொகுதியில்கூட பா.ஜ.க. வெற்றி பெறாது

## உதயநிதி ஸ்டாலின் கூறுகிறார்

பிரதமர் மோடி தமிழகத்திலேயே வந்து தங்கினாலும், ஒரு தொகுதியில்கூட பா.ஜ.க. வெற்றி பெறாது என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் முரசொலியை ஆதரித்து, மன்னார்குடியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று உரையாற்றுகையில்,

"நானும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன்தான். எங்கு சுற்றினாலும், கடைசியில் இந்த மண்ணுக்கு வந்துதான் சேர வேண்டும். உதயசூரியனையும்,



முரசொலியையும் யாராலும் பிரிக்க முடியாது.

திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் புதுமைப் பெண்கள் திட்டத்தின் கீழ் 4,250 மாணவிகளுக்கு மாதாந்திர ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் எடுத்துக்காட்டாக இருப்பதுதான் திராவிட மாதிரி அரசு. பிரதமர் மோடி தற்போது தமிழகத்துக்கு அடிக்கடி வந்து செல்கிறார்.

பிரதமர் தமிழகத்திலேயே தங்கினாலும், இங்கு ஒரு தொகுதியில்கூட பா.ஜ.க. வெற்றி பெறாது. இந்த தேர்தலில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற, அனைவரும் வேட்பாளர் முரசொலியை ஆதரிக்க வேண்டும்." – என்றார்.

# கச்சதீவு விவகாரத்தில் பா.ஜ.க. இரட்டை வேடம்

## மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

கச்சதீவு விவகாரத்தில் பாரதிய ஜனதா கட்சி இரட்டை வேடம் போடுகிறது என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தல் பிராச்சாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"திட்டமிட்டே தேர்தல் காலத்தில் வதந்திகளை பரப்பி, தமிழ்நாட்டில் அரசியல் இலாபம் பெற பாரதிய ஜனதா கட்சியினர் முயற்சிக்கின்றனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற விழா ஒன்றின் போது, பிரதமர் மோடி முன்னிலையில், கச்சதீவை மீட்டுத்தர வேண்டும் என முதலமைச்சர் என்ற வகையில் நான் கோரிக்கை விடுத்தேன்.



10 ஆண்டு கால பாரதிய ஜனதா ஆட்சியில் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை." – என்றார்.





# ரஷ்யாவின் 6 விமானங்களை சுட்டு வீழ்த்தியது உக்ரைன்

ரஷ்யாவின் 6 யுத்த விமானங்களை சுட்டு வீழ்த்தியதாக உக்ரைன் அறிவித்துள்ளது.

அத்துடன் தெற்கு ரஷ்யாவில் உள்ள இலக்குகள் மீது உக்ரைன் ஆளில்லா விமான கருவி தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 20 பணியாளர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்கள் தொடர்பில் ரஷ்யா எந்த கருத்தையும் இதுவரையில் முன்வைக்கவில்லை.

எவ்வாறாயினும் உக்ரைன் தரப் பிலிருந்து 40க்கும் மேற்பட்ட ஆளில்லா விமான கருவி தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.






# அமெரிக்காவில் நிலநடுக்கம்!

அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 4.8 மெக்னிடியூட்டாக இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நில அதிர்வைத் தொடர்ந்து, பிலடெல்பியாவில் உள்ள சிட்டி ஹால் உள்ளிட்ட கட்டடங்களில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், நில அதிர்வையடுத்து ஆழிப்பேரலை எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜப்பானில் மூன்றாவது முறையாக இன்றும் தொடர்ந்த நிலநடுக்கம்

ஜப்பானின் ஹோன்ஷு நகரில் இன்று மூன்றாவது முறையாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவில் 5.4 ஆக பதிவாகி உள்ளது.

இதனை தொடர்ந்து ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டதுடன் அலைகள் மூன்று மீற்றர் உயரத்திற்கு கடலில் எழக்கூடும் என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் கணிப்பு வெளியிட்டது.

அத்தோடு தைவான் நாட்டின் தலைநகரான தைப்பேவில் கடந்த 3 ஆம் திகதி 7.2 ரிக்டர் அளவுகோலில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் பதிவாகியிருந்தது.

இந்த நிலநடுக்கம் நிலம் மற்றும் நீர் பரப்பை ஒட்டிய பகுதியில் உணரப்பட்டதோடு 35 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

மேலும் தைவானில் 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு




ஏற்பட்ட இந்த சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தினால் ஒன்பது பேர் உயிரிழந்தனர். 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 06

# கனடா முரசு

சனிக்கிழமை 06/04/2024

**வீடு கட்ட கடன், நிதி உதவியாக 600 மில்லியன் டொலர் ஒதுக்கீடு**

ஒன்ராரியோ,ஏப்ரல்06
வீட்டு உரிமையாளர்களுக்கும், வாடகைதாரர்களுக்கும் வீடுகளை கட்டுவதனை எளிதானதாகவும், மலிவானதாகவும் மாற்றுவதற்கு கடன்கள் மற்றும் நிதியுதவி C2

# தமிழர்களின் குரல் எனும் தகுதி நிலையை இழந்துவிட்டது கனடியத் தமிழர் பேரவை

## கனேடியத் தமிழர் கூட்டு காட்டம்

**தமிழர்களின் குரல் எனத் தம்மைப் பகிரங்கமாக அடையாளப்படுத்துவ தற்கான தார்மீக அதிகாரத்தை கனடியத் தமிழர் பேரவை இழந்துவிட்டதாக கனேடியத் தமிழர் கூட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**கனடியத் தமிழர் பேரவையினால் இமா லயப் பிரகடனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றமை உள்ளடங்கலாக பேரவையின் அண்மைக்காலச் செயற் பாடுகளை விமர்சிக்கும் வகையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.**

**அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள் ளதாவது:-**

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

'கனடிய தமிழர் பேரவைக்கு எதிரான கண்டனம் மற்றும் நடவடிக்கைக்கான அழைப்புகள் ஈழத்தமிழர்கள் மத்தியில் தொடர்ந்து உரத்து எதிரொலிக்கிறது. எனினும், இது பற்றிய எந்த நடவடிக் கையும் எடுக்காத தன்மை கனடியத் தமிழர் பேரவை தரப்பில் நீடிக்கிறது. சமூகத்தின் அனைத்துப் பிரிவினர்களிட மிருந்தும் ஒரு காத்திரமான பதிலை எதிர்பார்த்து பல கோரிக்கைகள் எழுந் துள்ளன. ஈழத்திலும், புலம்பெயர் நாடுக ளிலும் உள்ள கிராமம் மற்றும் நகர சங்கங்கள் உட்பட, மாணவர் சங்கங்க ளுக்கும் அப்பால் இக்கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. கனடியத் தமிழர் பேரவையின் நெருக்கமான இரகசிய உறுப்பினர்களையும் தாண்டி இவ் வாறான கண்டனங்கள் பரவலடைந் துள்ளன.

அண்மையில், கனேடியத் தமிழர் கூட்டு ('கூட்டு') மார்ச் 23, 2024 அன்று நடத்திய மக்கள் சந்திப்பில் இது தெளி வாக வெளிப்பட்டது. இதில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான சமூக உறுப்பினர்கள் தங்கள் அக்கறை, விரக்தி, சீற்றம் மற்றும் கவலை என்ப வற்றை கனடியத் தமிழர் பேரவையின் நடவடிக்கைகள் தொடர்பில் வெளிப் படுத்தினர்.

ஏப்ரல் 27, 2023 அன்று, கனடியத் தமிழர் பேரவையின் பிரதிநிதி திரு. ராஜ் தவரட்ணசிங்கம் இமயமலைப் பிரகடனத்தில் ('பிரகடனம்') கையெ ழுத்திட்டார். அதில் தமிழ் மக்கள் மீது, இலங்கை அரசு இழைத்த கொடுமை களான இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் அல்லது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் எவ்வித பொருள்கோடலோ, ஒப்புதலோ, அடை யாளப்படுத்தலோ உள்ளடக்கப்பட வில்லை. ஈழத்தமிழர்களிடமிருந்து எந்த வித கருத்து உள்வாங்கலோ அல்லது பங்களிப்போ இல்லாமல் குறித்த பிரகடனம் கையெழுத்திடப்பட்டது.

குறித்த பிரகடனம், கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை நியாயப்படுத்தவும் வரலாற்று ரீதியாகத் தொடர்ந்த அநீதி களுக்கான தடயங்களை அழிக்கவும் முயல்கிறது. அதில் தமிழர்கள் குறித்த குறிப்போ அல்லது அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்தோ இல்லாமை இலங்கையை சமத்துவம் மற்றும் பன்மைத்துவத்தை அடிப்படையா கக் கொண்ட ஒரு சமூகமாக C2

# ஹெய்ட்டியில் இருந்து கடைசித் தொகுதி கனடியர்களின் விமானம் நாளை புறப்பாடு

ஒன்ராரியோ,ஏப்ரல்06

ஹெய்ட்டியில் இருந்து கடைசித் தொகுதி கனடியர்களை ஏற்றிய விமானம் ஏப்ரல் 7ஆம் திகதி புறப்பட வுள்ளது.

கனடிய பிரஜைகள், நிரந்த வதிவா ளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் உள்ளடங்கலாக 250 பேர் இதுவரை ஹெய்ட்டியில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர் எனக் கனடிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹெய்ட்டியில் இருந்து வெளியேறு வதற்கான கோரிக்கைகளை தாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறார் எனவும், அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளமையால் மேலதிக விமான சேவைகளுக்கான தேவையிருக்காது எனவும் வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித் துள்ளார்.

ஹெய்ட்டியில் அண்மையில் ஆரம் பித்த குழு வன்முறைகளைத் தொடர்ந்து உணவு மற்றும் மருந்துகளுக்கான பற்றாக்குறை அதிகரித்துள்ளதுடன், ஹெய்ட்டியில் இருந்து வெளியேற விரும்புபவர்களை தாமதிக்காது கனடிய வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறு அமைச்சர் கோரியுள் ளார்.

## வீடு கட்ட...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

யாக 600 மில்லியன் டொலர்களை மத்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

கல்கரியில் வைத்து ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

வீட்டு விலை என்பது அதிகரித்துச் செல்வதால் இளம்தலைமுறையினர் அதனை அடையாத முடியாத நிலை தோன்றியுள்ளதாகவும், அவ்வாறு அதனைவிட முடியாது எனவும், அதனை மாற்ற வேண்டும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதில் 50 மில்லியன் டொலர்கள் வீடமைப்பு தொழிநுட்பம் மற்றும் புத்தாக்க நிதியாகவும், 50 மில்லியன் டொலர்கள் நவீன மற்றும் துரித நிர்மாணத்திற்காக ஒதுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலதிக, 500 மில்லியன் டொலர்கள் புத்தாக்க நிர்மாண உத்திகளுக்காக கடனாக வழங்கப்படும் என பிரதமர் கூறியுள்ளார்.

## தமிழர்களின் குரல் ...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

படம்பிடித்து காட்ட முயல்கிறது. இது இலங்கை குறித்த உண்மைத் தன்மைக்கு வெகுவாக அப்பாற்பட்டது.

நிதர்சனத்தில், அடிப்படை உண்மைகளை அங்கீகரிக்காமல், உண்மையான நல்லிணக்கம் என்பது எப்போதும் சாத்தியமாகாது. இத்தகைய அருவருப்பான செயலை நியாயப்படுத்த சிங்களம் என்ற பதமும் பிரகடனத்தில் குறிப்பிடப்படவில்லை எனக் கூறுவது, தமிழர்கள் எதிர்கொண்ட துன்பம் நிறைந்த வரலாற்றை கேலிக்கூத்தாக்குவதாகும். அதேவேளை, குற்றவாளியை பாதிக்கப்பட்டவர்களுடன் சமநிலையில் வைத்திருக்கும் ஒரு முயற்சியாகும்.

குறித்த பிரகடனத்தை ஓர்ச்உடன்படிக்கை அல்ல என கனடியத் தமிழர் பேரவை தவறாக வகைப்படுத்துகிறது.

எனினும், இந்தப் பிரகடனம் அரசமைப்பு சீர்திருத்தத்தின் அடிப்படையாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். இந்நிலை, தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் அநீதிகளை முற்றாக மறைத்து, நல்லிணக்கத்தை வெறும் வார்த்தை பிரயோகமாக மாத்திரமே வைத்திருக்கும்.

போர்க்குற்றவாளி மஹிந்த ராஜபக்ஷவை கனடியத் தமிழர் பேரவை சந்தித்ததோடு அவருடன் ஒளிப்படமும் எடுத்துக்கொண்டது. கனேடிய அரசாங்கம் மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தடை விதித்துள்ளது. இருப்பினும், கனடியத் தமிழர் பேரவை, தடையை பொருளாதார தடையாக மட்டுமே வகைப்படுத்துகிறது. இது போன்ற தடைகளின் நோக்கத்தையும், அர்த்தத்தையும் புரிந்துகொள்ளவோ அல்லது கண்டுகொள்ளவோ இயலாத நிலையில் கனடியத் தமிழர் பேரவை தனது பார்வைப்புலனை இழந்துள்ளது. இந்தத் தடை பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டதாக இருக்கலாம். இருப்பினும், அத்தகைய தடைகளின் நோக்கங்கள் எப்போதும் முற்றிலும் அரசியல் சார்ந்தவையே. இந்தத் தடையை வெறுமனே பொருளாதாரத்துடன் தொடர்புடையது என வகைப்படுத்துவது கபடத்தனமானதும், பயங்கரமானதுமாகும்.

புதிய உறுப்பினர்களின் இணைப்புக்கான கோரிக்கைகளை கனடியத் தமிழர் பேரவை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. தற்போது, உறுப்பினர் இணைப்பு என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர் இணைப்புக் குறித்த முடிவுகள், முற்றிலும் தன்னிச்சையானவையாக உள்ளன. இது எந்தவிதமான ஜனநாயக கோட்பாடுகள், பொறுப்புக்கூறல், சட்டத்தின் ஆட்சி அல்லது வெளிப்படைத்தன்மையற்ற ஒரு முறையாகும். தமது முடிவுகள் உறுப்பினர்களின் ஆதரவை அடிப்படையாகக் கொண்டவை என்பதை கனடியத் தமிழர் பேரவை தொடர்ந்து வலியுறுத்துகிறது. இருப்பினும், உறுப்பினர் அனுமதி என்பது, தமக்கு இணக்கமான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தெரிவு செய்யப்பட்ட தனிநபர்களுக்கானது என்ற நிலை அவமானகரமானதும், அபாயகரமானதும் ஆகும்.

இந்த அணுகுமுறை சுதந்திரமாகக் கருத்துக்கூற முடியாமை மற்றும் உண்மையான விருப்பத்தை வெளிப்படுத்த முடியாத நிலையை உருவாக்கி, தமிழர்களைத் தோல்வியுறச் செய்கிறது. இத்தகைய அநீதியை எதிர்க்கும் ஊடகவியலாளர் அல்லது சமூக உறுப்பினர்களுக்கு எதிராக அவதூறு சட்டத்தை கனடியத் தமிழர் பேரவை தொடர்ந்து ஆயுதமாகப் பயன்படுத்துகிறது. இது பேச்சு சுதந்திரம் மற்றும் பொதுப் பங்கேற்பை மௌனமாக்கும் ஒரு நகர்வாகும்.

இறுதியாக, தமிழர்களுக்கு எதிராக எந்த விதமான இனப்படுகொலையும் நடைபெறவில்லை என்பதை கனடியத் தமிழர் பேரவை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது உலகின் அனைத்து மூலைகளிலும் உள்ள தமிழர்கள் நிராகரித்துக் கண்டிக்கும் ஒரு நிலைப்பாடாகும். கனடியத் தமிழர் பேரவையின் தொடரும் இனப்படுகொலை மறுப்பும், அதனை நியாயப்படுத்துதலும், பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் குடும்பங்களையும் அவமானப்படுத்துவதாகும். நடைபெற்ற இனப்படுகொலை என்பது தமிழர்களை மீள முடியாத துயரில் தொடர்ந்தும் வைத்துள்ளது.

தமிழர்களைப்பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் கனடியத் தமிழர் பேரவை இதனை மறுப்பது, இந்தத் துயரையும் அழிவையும் தொடர ஏதுவாக்குகிறது. அத்தகைய ஒரு நிலைப்பாடு, இழந்த உயிர்களைப் பெரிதும் அவமதிப்பதோடு, அவர்களின் சாம்பல்களையும், கல்லறைகளையும் இழிவுபடுத்துவதற்குச் சமமானதாகும்.

இந்தத் தருணத்தில், ஈழத் தமிழர்கள் அல்லது கனேடியத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தவோ, அல்லது 'தமிழர்களின் குரல்' எனத் தம்மைப் பகிரங்கமாக அடையாளப்படுத்தவோ, தார்மீக மற்றும் அதிகாரத்தை CTC இழக்கிறது.

எனவே, கனடியத் தமிழர் பேரவை கண்டிப்பாக:

– பிரகடனத்தில் இருந்து பகிரங்கமாக விலக வேண்டும். இது போன்ற நிலை மீண்டும் நடைபெறாமல் இருக்க, இந்த மாபெரும் தவறுக்கு வழிவகுத்த முடிவெடுக்கும் செயல்முறையை வெளிப்படுத்துவதுடன், ஈழத் தமிழர்களிடமும், உலகெங்கிலும் உள்ள தமிழர்களிடமும் நேரடியாக மன்னிப்புக் கோரவேண்டும். கனேடியத் தமிழர் கூட்டின் மக்கள் சந்திப்பு நடைபெற்ற மார்ச் 23, 2024 அன்று வெளியான கனடியத் தமிழர் பேரவையின் அறிக்கை எந்த தவறுக்கும் பொறுப்பேற்கவில்லை. மாறாக, அது பிரகடனத்தில் இருந்து கனடியத் தமிழர் பேரவை யைவிலத்தி வைக்க முயற்சிக்கிறது. அல்லது தனக்கான பொறுப்பிலிருந்து தன்னை விடுவிக்க முயற்சிக்கிறது. பிரகடனம் கடுமையாகக் கண்டிக்கப்பட்டு மீள முடியாத தாக்கத்தை ஏற்படுத்திய நிலையில், கனடியத் தமிழர் பேரவையின் இந்த நிலைப்பாடு பொறுப்பானதோ அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்கதோ அல்ல.

நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் அர்த்தமுள்ள ஈடுபாட்டுடன் ஈழத் தமிழர்கள் மற்றும் கனேடியத்தமிழர்களுக்கான அரசியல் பரப்புரைகளை முன்னெடுக்க வேண்டும்.

கனேடியத் தமிழர்களின் உண்மையான ஆணையை பெற்று, அவசியமான சீர்திருத்தம் நிகழும் வரை கனடியத் தமிழர் பேரவை அமைப்பானது, கனடா, அமெரிக்கா, இலங்கை அல்லது வேறு எந்த நாடுகளுடனோ அல்லது அவற்றின் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகளுடனோ அனைத்து தொடர்புகளையும் நிறுத்த வேண்டும். இலங்கை மற்றும் பிற அரச அதிகாரிகளுடன் கனேடியத் தமிழர்களின் கருத்துக்கள் பெறப்படாமல் அல்லது அவர்களின் ஆணை எதுவுமின்றி, வரலாற்று ரீதியாக வெளிப்படைத் தன்மையற்ற பல சந்திப்புகளை கனடியத் தமிழர் பேரவை நடத்தியுள்ளது. அத்தகைய ஒரு அணுகுமுறை தொடர்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இறுதியாக, கனடியத் தமிழர் பேரவை தன் மீதான நம்பிக்கையை பெருமளவு இழந்துள்ளதை கருத்தில் கொண்டு, ஈழத் தமிழர்கள் மற்றும் கனேடியத் தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கி, அடுத்தகட்ட நடவடிக்கைகளை தீர்மானிக்க உதவும் முகமாக, ஏப்ரல் 18, 2024க்குள் சமூக உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிரந்தர நிலைக்குழுவை நிறுவுவதற்கான செயல்முறையை கனடியத் தமிழர் பேரவை ஆரம்பிக்க வேண்டும் என 'கனேடியத் தமழர் கூட்டு' அழைப்பு விடுகிறது. – என்று உள்ளது.



# இரண்டு பூர்வீகக் குடி ஆண்கள் 3 மட்ட அரசுகள் மீதும் வழக்கு

மனிடோபா,ஏப்ரல்06

வின்னிபெக்கைச் சார்ந்த இரண்டு பூர்வீகக் குடி ஆண்கள் மூன்று மட்ட அரசாங்கத்திற்கு எதிராகவும் இனப்பாரபட்ச வழக்கினைத் தாக்கல் செய்துள்ளனர்.

1973ஆம் ஆண்டில் உணவு விடுதி பணியாளர் ஒருவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட பிறயன் என்டர்சன் மற்றும் எலன் வூட்ஹவுஸ் ஆகியோருக்கு எதிராக தண்டனை வழங்கப்பட்டது.

பல தசாப்தங்களாக தமது குற்றமற்றத் தன்மையை நிரூபிப்பதற்காக அவர்கள் போராடி வருகின்றனர்.

முன்னாள் நீதியமைச்சர் டேவிட் லெமட்டியினால் புதிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த வருடத்தில் போதிய ஆதாரங்கள் இன்மையால் இவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் மனிடோபா அரசாங்கம், கனடிய சட்டமாஅதிபர் மற்றும் வின்னிபெக் நகரம் ஆகியவற்றுக்கு எதிராக தனியான மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

குற்றவியல் நீதி கட்டமைப்பில் காணப்படும் இனவாதம், இனவாத கருத்தியல்கள் மற்றும் இனப் பாரபட்சத்தினால் குறித்த இருவருக்கும் பிழையாக தண்டனையளிக்கப்பட்டதாக இந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த இரு ஆண்களினதும் உரிமைகள் மீறப்பட்டு, அப்போதைய அரச வழக்குரைஞர் இவர்களை சிறையில் தள்ளுவதற்கு சதி செய்தார் எனவும் அந்த மனுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தேர்தலில் வெளிநாட்டுத் தலையீடு பற்றிய பொது அறிவிப்பு கடைசி நேரத்தில் வாபஸ்

## சிரேஷ்ட அரச அதிகாரிகள் இப்போது தகவல்

ஒன்ராரியோ,ஏப்ரல்06

கடைசியாக நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலின் போது வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவிக்க நினைத்த போதிலும், பின்னர் அந்தத் தீர்மானத்தை தவிர்த்ததாக சிரேஷ்ட அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2019ஆம் ஆண்டு மற்றும் 2021ஆம் ஆண்டு கனடிய நாடாளு மன்றத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பில் மத்திய அரசாங்கத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணையில் முன்னிலையாகிய சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளே இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

குறித்த நேரத்தில் பொது மக்களுக்கு வெளிநாட்டுத் தலையீடு தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தால், அது மேலும் தவறான தகவல் பிரசாரத்திற்கு வழிகோலியிருக்கும் என்பதாலேயே அது குறித்த தகவல்களை பகிரங்கப் படுத்தவில்லை என கனடிய பிரிவி கவுன்ஸிலில் பணியாற்றும் எலன் சந்தர்லேன்ட் தெரிவித்துள்ளார்.

கனடாவில் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதற்கு அச்சுறுத்துல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அது குறித்து பொது மக்களுக்கு அறிவிப்பதற்கான ஐந்து பேர் அடங்கிய குழு இது குறித்து கலந்துரையாடியதாக சந்தர்லேன்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விசாரணைக் குழுவின் இடைக் கால அறிக்கை மே மாதம் 3ஆம் திகதி வெளியாகவுள்ளதுடன், முழு அறிக்கை வருட இறுதியில் வெளியாகவுள் ளது.



# 2019, 2021இல் கனடாத் தேர்தல்களில் இந்தியா, பாக். தலையிட முயன்றனவாம்

ஒன்ராரியோ,ஏப்ரல்06

2019 மற்றும் 2021இல் கனடாவின் நாடாளுமன்றத் தேர்தல்களில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அரசாங்கங்கள் தலையிட முயன்றன என்பது கனடாவின் உளவு நிறுவனம் வியாழக்கிழமை இரவு பகிரங்கப்படுத்திய ஆவணங்களில் தெரிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டில், கனடாவில் உள்ள இந்திய அரசாங்கப் ப்ராக்ஸி முகவரைப் பயன்படுத்துவது உட்பட, 'தலையிடும் மற்றும் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடும் எண்ணம்' இந்திய அரசாங்கம் கொண்டிருந்தது என்று கனேடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை (CSIS) எழுதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 2019இல், 'கனடாவில் உள்ள பாகிஸ்தான் அரசு அதிகாரிகள் கனடாவில் பாகிஸ்தான் அரசாங்கத்தின் நலன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் கனேடிய நாடாளுமன்ற அரசியலில் இரகசியமாக செல்வாக்கு செலுத்த முயன்றனர்' என்று ஊளுஐளு குறிப்பிட்டுள்ளது.

இந்த மதிப்பீடுகள் வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பான மத்திய விசாரணைக் குழுவின் ஒரு பகுதியாக தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் உள்ளன.

2019 மற்றும் 2021 நாடாளுமன்றத் தேர்தல்களில் சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் பிற நாடுகளின் தலையீடு தொடர்பில் பொது விசாரணைக் குழு ஆராய்ந்து வருகின்றது.






# ஆயுதத்துடன் கொள்ளைச் சம்பவம் மூன்று சிறுவர்கள் மீது குற்றச்சாட்டு

ஒன்ராரியோ,ஏப்ரல்06

கடந்த வியாழக்கிழமை ஏப்ரல் 4ஆம் திகதி மாலை ஃபோர்ட் எரியில் ஆயுதமேந்திய கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மூன்று சிறுவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

முனிசிபல் டிரைவ் பகுதிக்கு இரவு 7:30 மணிக்கு மேல் இந்த சம்பவம் தொடர்பில் நயாகரா பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். சந்தேக நபர்கள் ஆயுதத்தை காட்டி பாதிக்கப்பட்டவரிடம் அவரது உடைமைகளை ஒப்படைக் குமாறு கோரியுள் ளனர்.

பாதிக்கப்பட்டவருக்கு உடல்ரீதியாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களின் விளக்கங்களைப் பெற்ற பின்னர், அதிகாரிகள் பின்னர் சம்பவ இடத்திலிருந்து சிறிது தூரத்தில் மேற்படி சிறுவர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்தனர்.

# நான்கு பழங்குடிப் பெண்களின் மரணம் விசாரணைக்கு முன் மன்னிப்புக்கோரல்

யூகோன்,ஏப்ரல்06

வைட்ஹோர்ஸ் அவசரகால காப்பகத்தில் சேவைகளை அணுகிய நான்கு பழங்குடி பெண்களின் மரணம் குறித்த விசாரணைக்கு முன்னதாக யுகோனின் மாகாண முதல்வர் பகிரங்கமாக மன்னிப்பு கோரியுள்ளார்.

நான்கு பெண்களின் வாழ்க்கையும் மிக விரைவில் முடிந்துவிட்டதாகவும், 'இதற்காக நாங்கள் மிகவும் வருந்துகிறோம்' என்றும் முதல்வர் ரஞ்ச் பிள்ளை தெரிவித் துள்ளார்.

கசாண்ட்ரா வார்வில்லே, மைராண்டா திஸ்யா-சார்லி, ஜோசஃபின் எலிசபெத் ஹாகர் மற்றும் டார்லா ஸ்கூகம் ஆகியோர் ஜனவரி 2022 மற்றும் ஏப்ரல் 2023 க்கு இடையில் அவசரகால காப்பகத்தில் உயிரிழந்தனர்

விசாரணையின் போது குடும்பங்களுடன் இருக்க சமூக உறுப்பினர்களுக்கு வைட்ஹோர்ஸ்க்குச் செல்ல அரசாங்கம் நிதியுதவி அளித்து வருவதாகவும், ஆலோசனைக்கான அணுகல் அதிகரிக்கும் என்றும் துணை முதல்வர் ஜீனி மெக்லீன் கூறியுள்ளார்.

# கார்பன் விலை நிர்ணய சர்ச்சை விடயத்தில் தம் நிலைப்பாடு நியாயம் என்கின்றார் ஸ்மித்

அல்பேர்ட்டா,ஏப்ரல்06

கார்பன் தள்ளுபடிகள் குறித்து தாம் முன்னர் சாதகமாகப் பேசினாலும், அதிகரித்துச் செல்லும் வரியினை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் நியாயப் படுத்த முடியாது என அல்பேர்ட்டா முதல்வர் டேனியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ட்ரூடோவின் அறிக்கை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, அவர் அதனைக் கூறியுள்ளார்.

வார இறுதியில், மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஸ்டீவன் கில்பேல்ட் 2021இல் வருவாய்-நடுநிலை கார்பன் விலை நிர்ணயத்தின் நன்மைகள் பற்றி முதல்வர் ஸ்மித் பேசும் காணொலியை சமூக ஊடகங்களில் வெளியிட்டிருந்தார்.

அதில், இயற்கை எரிவாயு மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்கு தான் செலுத்திய கார்பன் கட்டணத்தை விட அதிகமான தள்ளுபடியை பெற்றதாக அவர் கூறியிருந்தார்.

இருப்பினும், அண்மைய கார்பன் விலை அதிகரிப்பு என்பது நியாயப்படுத்த முடியாதது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

குணம்ஸ் சுப்பர்மார்க்கட் GSM GUNAAM SUPERMARKET

# Super Deal of this Week


## till April 7th

LOWEST PRICE LB 4.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Small Onion

LOWEST PRICE LB 1.49$ Only at GUNAAM'S SUPER MARKET




EggPlant

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET




Blue Fish

LOWEST PRICE 6.99$ Only at GUNAAM'S SUPER MARKET




ஊர் கோழி

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

LOWEST PRICE LB 5.99$ Only at GUNAAM'S SUPER MARKET



சுறா fish

## இந்த வாரம் Gunaam's super market தரும் Super Deal

| | | |
|---|---|---|
| Harischandra Pappadam | - | $1.00 |
| MR.Goudas Table Salt | - | $1.00 |
| MR.Goudas Sea Salt | - | $1.49 |
| Blue Sea Tin Fish | - | $1.99 |
| Baba Uppuma mix | - | $2.99 |
| Chocolate Swiss Roll | - | $3.99 |
| 200g Tamarind 5for | - | $5.00 |
| Nestum Seriyal | - | $5.99 |
| Kott mee Noodles 6for | - | $5.99 |
| Raigam Noodles 2for | - | $5.00 |
| 7lb Brown Sugar | - | $8.99 |
| 3lt MR.Goudas Sunflower oil | - | $8.99 |
| Maharaja Rice Flour | - | $8.99 |
| Niru அவித்த மா | - | $8.99 |
| AROY–D Coconut Milk Tin 4for | - | $10.00 |
| MR.Goudas Coconut Milk Powder 3for | - | $10.00 |
| Niru Tin Fish 4for | - | $10.00 |
| 900g maggi Coconut Powder | - | $11.99 |
| Maharaja Curry Powder | - | 11.99 |

| | | |
|---|---|---|
| Maharaja Basmati Rice | - | $13.99 |
| EggPlant | - | $1.49lb |
| Drumstick | - | $4.99lb |
| Small Onion | - | 4.99lb |
| Rasavalli | - | $5.99lb |
| Karunayam | - | $4.99lb |
| Super deal gift mysoor Daal | - | $1.00 |

### Fish Market Special Sale

| | | |
|---|---|---|
| ஊர்க்கோழி | - | $6.99 |
| Ceylon விளைமீன் | - | $7.99lb |
| Blue fish | - | $3.99lb |
| இறால் | - | $3.99lb |
| சுறா Fish | - | $5.99lb |
| திரளி | - | $5.99lb |
| Ceylon பாரை | - | $8.99lb |
| Ceylon காரள் | - | $7.99lb |
| KO King fish | - | $7.99lb |
| KO Salmon fish | - | $7.99lb |
| Sea Breem fish | - | $7.99lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998